2019 ஜூலை 12]

நரிக்குடி முதல் திருப்புவனம் வழித்தடத்தை துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அந்த வழித்தடத்தில் புறநகர் பேருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

மாணவியர் விடுதி

***22867**—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேடசந்தூர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில்கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய குடும்ப குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், இந்தச் சபையில் நடுநாயகமாக அமர்ந்திருக்கக்கூடிய தங்களையும் வணங்குகிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் பள்ளி மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை வேடசந்தூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.*

வேடசந்தூர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி புதிதாக அமைக்க வேண்டிய தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த 7–வது கூட்டத்தொடரின் 100–வது கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள் கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், இந்தக் கூட்டத்தொடரின் 100வது கேள்வியினைக் கேட்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக தங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில், அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய வேடசந்தூர் தொகுதி என்பது 800–க்கும் அதிகமான குக்கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அதிலும் 50–க்கும் அதிகமான மலைக் கிராமங்கள் உள்ளன. குறிப்பாக அய்யலூர் பேரூராட்சிப் பகுதியை ஒட்டி பஞ்சம்தாங்கி, பஞ்சம்தாங்கிபுதூர், காக்காயன்பட்டி, மலைப்பட்டி போன்ற பல்வேறு மலைக் கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் அய்யலூரில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி, வடமதுரையில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கல்வி பயில வந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த மலைக் கிராமங்களைச் சேர்ந்த மாணவியர்கள் தங்கிப் படிக்கின்ற வகையிலே அய்யலூர் பகுதியை மையமாகக் கொண்டு, இந்த ஆண்டிலோ அல்லது வருகின்ற ஆண்டிலோ பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியை பள்ளி மாணவியர்களுக்காக அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் 49 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 2,850 ஆகும். குறிப்பாக வேடசந்தூர் தொகுதியில் 6 பள்ளி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் மொத்தம் 384 மாணவ, மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இவை தவிர, வேடசந்தூர் தொகுதியில் அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதி ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 2018–2019 ஆம் ஆண்டில் வேடசந்தூர் தொகுதியில் புதியதாக ஒரு கல்லூரி மாணவியர் விடுதி துவங்கப்பட்டு, அவ்விடுதியானது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் பெருவாரியான கிராமங்கள் மற்றும் நகரங்களில் மாணவ, மாணவியர்கள் கல்வி கற்கத் தேவையான உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள்மூலம் தடையின்றி கல்வி பயில கட்டணமில்லா பேருந்து வசதிகள், விலையில்லாத மிதிவண்டிகள் போன்ற வசதிகள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, வேடசந்தூர் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்* V.P.B. *பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக் கிராம மக்கள் நிறைந்திருக்கின்ற அந்தப் பகுதியிலே வருங்காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில் அங்கே ஒரு விடுதியினை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் எங்களது வேடசந்தூர் தொகுதிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு ஒருபுதிய அரசு கலைக்கல்லூரி அவருடைய காலத்தில் வழங்கப்பட்டு, இன்று 1,500–க்கும் அதிகமான மாணவியர்கள் அங்கே கல்வி பயின்று வருகின்றார்கள். வேடசந்தூரின் கடைக்

கோடியிலிருந்து வருகின்ற அந்த மாணவியர்களுக்கு ஏதுவாக, கல்லூரி மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் நடக்கின்ற ஒரு விடுதி வேண்டுமென்று கோரியவுடன் உடனடியாக அந்த ஆணையினை கடந்த ஆண்டு பிறப்பித்து, இன்று 100 இடங்கள் அங்கே ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 92 இடங்கள் விரைவாக நிரம்பி, மாணவியர்கள் அந்த விடுதியில் சேர்ந்து படிக்கின்றனர். இப்போது அந்த விடுதியானது வாடகைக் கட்டடத்தில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தக் கலைக் கல்லூரிக்கு அருகிலேயே துறை மூலமாக ஓர் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மாணவியர்களின் பாதுகாப்பிற்காக அந்தக் கல்லூரியினுடைய வளாகத்தினுள்ளே அமைகின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது. ஆகவே, இந்த ஆண்டே வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற கல்லூரி மாணவியருக்கான அந்த விடுதியினை புதிய கட்டடத்தில் இயங்குகின்றவிதமாக, அந்தக் கட்டடத்திற்கான நிதியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வரும் ஆண்டில் அவருடைய தொகுதியிலுள்ள அந்தக் கல்லூரியின் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட, மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]